Registered asa News paper in Ceylon ✶ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 183 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

சோபகிருது தை 18 ஆம் நாள் றம்ளான் 15 (31-1-64) வெள்ளிக்கிழமை இதழ் 354

# தென்வியட்னாமில் புதிய ராணுவப் புரட்சி!

## இரத்தம் சிந்தாமல் அதிகாரத்தை கைப்பற்றிய தளபதி

### முன்னாள் ராணுவத் தளபதிகள் சிறைவைக்கப்பட்டனர்

சைகோன், ஜன. 30

தென்வியட்னாமில் இரத்தக்களரியற்ற ராணுவப்புரட்சிமூலம், ராணுவத்தளபதி ஒருவர் அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பதாயும், கடந்த நவம்பர் மாதம் டியம் ஆட்சியைக் கவிழ்த்த முக்கிய ராணுவத் தளபதிகள் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

புரட்சியை நடத்தியவர் ராணுவத்தின் முதலாவது பிரிவை சேர்ந்த தளபதி என அறிவிக்கப்படுகிறது. முன்னாள் புரட்சி சபைத் தலைவர் என்ன வானார் என்பது தெரியவில்லை.

வீதிகளில் இப்போது சண்டை நடைபெறவில்லை. ஆனால் முக்கிய சந்திகளில் பீரங்கிகளும், கவச டாங்கிகளும், ஆயுதப்படைகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சைகோன் விமானநிலையம் மூடப்பட்டிருக்கிறது.

புரட்சியை எதிர்த்து மற்றோர் எதிர்ப்புரட்சி ஏற்பட்டிருப்பதாகக் கடைசியாகக்கிடைத்த செய்திகள் கூறின. ஆனால் அவை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

## சுதந்திரதின பகிஷ்கரிப்புக்கு தமிழ்ப் பகுதிகளில் ஏற்பாடு

நல்லூர், வெள்ளி

இலங்கையின் 17-வது சுதந்திரதினத்தை வருகிற செவ்வாய்க்கிழமை தமிழ்ப் பகுதிகளில் 8-வது தடவையாக பகிஷ்கரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை காலமும் கரிநாளாகக் கொண்டாடப்பட்டு வந்த சுதந்திரத்தினத்தை வேலை நாளாகக் கருதிச் செயல்படுவதென தமிழ்ப் பகுதிகளில் உள்ள பல ஸ்தலஸ்தாபன சபைகள் முடிவு செய்துள்ளன.

தமிழ்ப்பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களைத் திறந்து வைத்து வியாபாரம் நடத்துமாறு தமிழ் வர்த்தகர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டு வருகிறார்கள். இப்பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வழமைபோல வேலைக்குச் செல்லலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வழமைபோல சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிப்பதுடன் பொதுப் பிரார்த்தனைகளும் நடத்தப்படவிருக்கின்றன.

அன்று மாலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் ஆதரவில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## காந்திஜி சிரார்த்ததினம்: பிரார்த்தனைகளும் நூற்புயக்ஞமும்

### சமாதியில் ஆயிரக்கணக்கான மக்களின் மலராஞ்சலி

புதுடில்லி, ஜன. 30

மகாத்மாகாந்தியின் 16-வது சிரார்த்த தினமான இன்று தியாகிகள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. சுதந்திரப போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

டில்லி பிர்லா மாளிகை மைதானத்தில் துப்பாக்கிக் குண்டுகள் பட்டு, மகாத்மா காந்தி விழுந்த இடத்தில் இன்று அதிகாலை பிரார்த்தனை நடைபெற்றது. பின் ராஜ் காட்டிலுள்ள அவரது சமாதியில் நடைபெற்ற பிரார்த்தனையில் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனும், உபஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸைனும் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரும் கலந்து கொண்டனர். ஏராளமானோர் நூற்புயக்ஞத்தில் கலந்து கொண்டனர்.

முப்படைகளையும் சேர்ந்த 150 வீரர்கள் சமாதியில் அணிவகுத்து நின்றனர். ராஷ்டிரபதி மலர்வளையத்தை வைத்த போது அவர்கள் ஆயுதங்களை நீட்டி பின் கவிழ்த்துப் பிடித்துக் கொண்டு நின்றனர். பகல் 11 மணிக்கு நாடெங்கும் 2 நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது கப்பல்களும், விமானங்களும், ரயில் வண்டிகளும், இதரவாகனங்களும் இயங்கவில்லை. அலுவலகங்கள், பள்ளிகள் தொழில்தாபனங்கள் ஆகியவற்றில் அனைவரும் எழுந்து நின்று மௌனம் அனுஷ்டித்தனர்.

குளிர் கடுமையாக இருந்தும் இன்று அதிகாலை முதல் பல லட்சக்கணக்கான மக்கள் காந்தி மகாத்மாவின் சமாதிக்கு வந்து மலர்களைவைத்து அஞ்சலி செலுத்தினர். ஏராளமான வெளிநாட்டார்களும் அஞ்சலி செலுத்த வந்திருந்தார்கள்.

அஹமதாபாத்தில் காந்திஜி வசித்த சபர்மதி ஆச்சிரமத்தில் பிரார்த்தனையும், நூற்புயக்ஞமும் நடைபெற்றன.

இன்று குஜராத்தில் தீண்டாமை எதிர்ப்புவாரம் ஆரம்பமாகியது.

கல்கத்தாவில் நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் 2 நிமிடம் நிறுத்தப்பட்டது. இங்கிலாந்து, இந்தியா விளையாட்டுக்காரர்களும், பார்வையாளர்களும் அப்போது மௌனம் அனுஷ்டித்தனர்.

## பத்திரிகைக் காகித இறக்குமதி மேலும் வெட்டு

கொழும்பு, வியாழன்

பத்திரிகை அச்சிட உபயோகிக்கப்படும் (நியூஸ் பிறின்ட்) காகித இறக்குமதிக் கோட்டாவை மேலும் வெட்டுவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வெளிநாட்டு செலாவணியை மிச்சப்படுத்தும் நோக்கத்துடன் நேற்று கூடிய மந்திரிசபை இவ்வித முடிவைச் செய்துள்ளது.

## "நூறு ரூபாய் தொழில்பெறக்கூட எங்களுக்கு உரிமையில்லை"

### மன்னார் மாவட்ட இளைஞர் மன்றக் கூட்டத்தில் பேச்சு

மன்னார், வியாழன்

'பலநூற்றுக்கணக்கில் சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர்கள் தனிச் சிங்களக் கொடுமையால் உத்தியோகங்களை உதறித்தள்ளும் போது கேவலம் நூறு ரூபா ஆசிரியத் தொழிலுக்காக நாம் ஏங்கவில்லை. ஆனால் அந்தச் சிறு உரிமைகூட எங்களுக்கு மறுக்கப்படுவதை நாம் பொறுக்க முடியாது.'

இவ்வாறு மன்னார் மாவட்ட இளைஞர் மன்றத்தினரால் முற்றவெளி மைதானத்தில் மாணவ ஆசிரிய பரீட்சை முடிவுகளின் பாரபட்ச நிலையைக் கண்டித்து பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் மன்ற அங்கத்தவர் செல்வன் சுந்தரமூர்த்தி குறிப்பிட்டார்.

மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. அழகக்கோன் தலைமைவகிக்க மாஜி நீதிபதி திரு. ஜெயக்கொடியும் மற்றும் இளைஞர் மன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மன்னார் மாவட்ட மாஜி நீதிபதி திரு. ஜெயக்கொடி பேசுகையில் "இளைஞர்களின் விழிப்புணர்ச்சிக்கு மன்னார் இளைஞர்கள் முன்னோடியாய் இருந்தது மன்னார் மக்களின் முன்னேற்றத்துக்குச் சான்று எனவும், உரிமைக்காகப் போராடும் இந்த இளைஞர்களின் விழிப்பு மற்றும் தமிழ் இளைஞர்களுக்கும் நிச்சயம் வழிகாட்டும்" என்றும் குறிப்பிட்டார்.

மன்ற உறுப்பினரான செல்வன் பீரிஸ் "ஆக்கவும் அழிக்கவும் இளைஞர்களால் முடியும் வெற்றுப் பேச்சுப்பேசுவோரை இளைஞரின் விழிப்புணர்ச்சி தட்டிக் கவிழ்த்துவிடும்" என்றும் குறிப்பிட்டார்.

மற்றும் அடம்பன், முருங்கன், ஆட்காட்டிவெளி போன்ற பல பகுதிகளிலும் இருந்து வந்த இளைஞர் மன்றக் கிளைகளின் உறுப்பினர்களான பத்திநாதன், சூசைநாயகம், அந்தோனி மார்க் ஆகியோர் உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர்.

## ஆஸ்பத்திரிக் கமிட்டியின் முதலாவது கூட்டம்

### ஆங்கிலத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி கமிட்டியின் முதலாவது கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது குழுவின் அலுவல்கள் தமிழில் நடைபெற வேண்டுமென்று திரு. சி. கனகசுந்தரம் தெரிவித்த யோசனை மீது விவாதம் நடைபெற்றதாயினும் முடிவில் ஆங்கிலத்திலேயே கூட்டங்களை நடத்துவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

தலைவர் திரு. எஸ். வி. கதிரவேலுவின் தலைமையில் கூட்டம் ஆரம்பித்ததும் கூட்டத்தை எந்த மொழியில் நடத்துவதென்ற பிரச்சினையை டாக்டர் ஆர். சுந்தையா கிளப்பினார். தமிழில் நடத்துவது கஷ்டம் என சிலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

தமிழில் கூட்டம் நடத்துவது கஷ்டமல்லவென்றும் இங்கு தமிழில் அலுவல்களை நடத்தாது விடுவது வெட்கத்துக்குரியதென்றும் திரு. கனகசுந்தரம் தெரிவித்தார். ஆஸ்பத்திரிக் கமிட்டிக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு சிங்களத்தில் நியமனக் கடிதங்களை அங்கத்தவர்கள் திருப்பி அனுப்பியது ஆறுதலளிப்பதாகவும் அவர் கூறினார். "சிங்களத்தை எம்மீது திணிப்பதை எதிர்த்தேயாக வேண்டும்" என்று அவர் சொன்னார்.

இதற்குத் தலைவர் திரு. கதிரவேலு பதிலளிக்கையில் 'சிங்களத்தில் கடமையாற்ற வேண்டுமென்று எங்களை வற்புறுத்த எந்த அரசாங்கத்துக்கும் உரிமையில்லை. இந்தப் பதவியை நாங்கள் ராஜினாமாச் செய்யவும் தயாராக இருக்கிறோம்' என்று தலைவர் கூறினார்.

இங்குள்ள காரியதரிசிக்கு தமிழில் நடத்துவதால் சங்கடங்கள் ஏற்படக்கூடுமென்று தலைவர் தெரிவிப்பதைத் தொடர்ந்து கூட்டங்களை ஆங்கிலத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

### மணிவாக்கு

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட உயிரைப் போக்கடிக்க யாருக்குமே உரிமையில்லை. மனிதன் சாதாரணமாகவே நல்லவன்தான். சந்தர்ப்ப சூழ்நிலை, அவனைக் குற்றம் செய்ய வைக்கின்றன.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
...NADU ... National Tamil Daily Post Box 49, Jaffna
...grams EELA NADU Jaffna
Phone 389

...மசோபகிருது ஆண்டு
தை ௴ 17 உ (30-1-64)

## பதுளை மாணவர்கள்

பதுளைப் பாடசாலைப் புனரமைப்பை எதிர்த்து சென்ற இருபத்தைந்து தினங்களாகப் பாடசாலைகளுக்குச் செல்லாதிருந்த மூவாயிரம் தமிழ் மாணவர்களும் பாடசாலைக்குத் திரும்பியதாகக் கிடைத்த செய்தி பலருக்கும் ஆறுதல் அளிப்பதாகும். உதவிவித்தியாதிபதி டாக்டர் ஆனந்த குருகேயின் சமரச முயற்சிதான் மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்பக் காரணம். கோட்டே மற்றும் பகுதியில் மாணவர்கள் பாடசாலைப் புனரமைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய போது அவர்கள் விஷயத்தில் கல்வி அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுத்தது போல் பதுளைப்பகுதி மாணவர் விஷயத்திலும் உடனடியாகக் கவனம் செலுத்தியிருந்தால் மூவாயிரம் மாணவர்களின் ஒரு மாதப் படிப்பும் வீணாகியிருக்காது. காலங்கடந்தாவது இவ்விஷயத்தை சமரசமாகத் தீர்த்து வைத்ததற்காக டாக்டர் குருகேயைப் பாராட்டத்தான் வேண்டும்.

உதவிவித்தியாதிபதியின் சமரசத் திட்டம் என்ன என்பது விபரமாகத் தெரியவில்லையாயினும் கல்விமற்றும் சமூகவசதிகள் குறைந்த மலைநாட்டுதமிழ் மாணவர்களுக்கும் இதர பிள்ளைகளுடன் சமமான கல்வி வசதி அளிப்பதுதான் பாடசாலைப் புனரமைப்புத் திட்டத்தின் அடிப்படை நோக்கமென அவர் பதுளைப்பகுதி பெற்றோர்களிடம் தெரிவித்திருக்கிறார். இது மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகும். என்றாலும்நல்ல நோக்கத்தையுடைய திட்டங்கள்கூட அவைகள் செயல்படுத்தப்படுகையில் பாரபட்சம் காட்டப்படுகிறதென்பதையும் இதுசம்பந்தமாக அடிக்கடி புகார் கூறப்படுகிறதென்பதையும் உதவிவித்தியாதிபதி அறியாமலிருக்க முடியாது.

மலைநாட்டிலுள்ள தோட்டப் பாடசாலைகளின் நிலைமைகள் இன்னும் சீராகவில்லையென்பதையும் பாடசாலைப் புனரமைப்புத் திட்டத்தில் இப்பாடசாலைகளையும் சேர்த்துக் கவனிக்கப்பட வேண்டுமென்பதையும் கல்வி அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம். அப்பொழுதுதான் இந்த நாட்டிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் சமமானகல்வி வசதியளிக்கும் நோக்கம் சரிவர நிறைவேற முடியும். அரசியல் பிரச்னையாகிவிட்ட மலைநாட்டுத் தோட்டத்தொழிலாளரின் குடியுரிமை, வாக்குரிமைப் பிரச்னைகளை கல்விவிஷயத்தில் சேர்த்துக் குழப்பாது தோட்டப்பகுதிப் பிள்ளைகளும் கல்வி வசதி பெறுவதற்கான வகையில் கல்விக் கொள்கையை அமுல் நடத்த வேண்டியது பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கு மட்டுமல்ல நாட்டின் முன்னேற்றத்துக்கும் அவசியமாகும்.

தோட்டப் பாடசாலைகளையும் பாடசாலைப் புனரமைப் திட்டத்தின்கீழ் சேர்த்து, பிள்ளைகளுக்கு அவரவர்களின் தாய்மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்ற காலஞ்சென்ற பிரதமரின் கொள்கையையும் கடைப்பிடிப்பதானால் கல்விமந்திரியின் சிபார்சின் பேரில் பட்டப்படிப்புப்பெற்ற (தமிழ்) ஆசிரியர்கள் கானாவுக்கோ வேறுஎந்த நாட்டுக்கோ செல்ல வேண்டிய அவசியம் நேரிடமாட்டாதென்பது நிச்சயம்.

கல்விக் கொள்கையைச் சரிவர அமுல் நடத்தும் அதிகாரிகள், அரசியல் தீவிரவாதிகளின் கூச்சலுக்கு செவிசாய்க்காமல், ஏழைக்கு எழுத்தறிவிப்பதைப் புண்ணியமாகக் கருதி தமது அலுவல்களைச் செய்தால் இலங்கையில் கல்வி இல்லாதார் என்ற ஒருஇனம் இருக்க மாட்டாது. உதவிவித்தியாதிபதியின் சமரசத் திட்டம் மலைநாட்டில் கல்வி போதனையில் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்துமென்றே நம்புகிறோம்.

# சர்வோதய சோஷலிஸம்

— முதலியார் செ. சின்னத்தம்பி —

சென்ற சில ஆண்டுகளாக இந்தியாவிலே ஒரு மகத்தான- புனிதமான- புரட்சி இயக்கம் விநோபா அடிகள் தலைமையில் நடந்து வருகின்றது.

உலக சரித்திரம் இதுவரை கண்டறியாத புதுமையாய் - ஒரு அற்புத இயக்கமாக - இந்த அன்புப் புரட்சி திகழ்கிறது.

இதனைத்தான் சர்வோதய இயக்கம் என்று சொல்வது.

காந்தி அடிகள் வகுத்த அஹிம்சைக் கொள்கையின் - இலட்சியத்தின் சிகரமாய்ஒளிர்வது சர்வோதய தத்துவம்.

இந்தியாவின் விடுதலைப் போராட்ட முடிவில் அன்பையும் அறத்தையும், சத்தியத்தையும் அகிம்சையையும், அடிப்படையாகக் கொண்ட ஒரு புது உலக சமுதாயத்தை சர்வோதய சகோதரத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற ஆசை மகாத்மாவின் உள்ளத்தில் ஊறிக்கிடந்தது.

ஆனால் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்த சிலமாதங்களுக்குள்ளேயே அடிகளாரை ஆண்டவன் தனது திருவடிக்கு அழைத்துக் கொண்டு விட்டாராகையால், இந்த மாபெருங் கருத்து - இலட்சியம் - செயற்படும் வாய்ப்பு அடிகளாருக்கு இல்லாமல் போய் விட்டது.

காந்தி அடிகள் மறைந்தார். ஆனால் ஜீவசக்தி வாய்ந்த காந்தீயம் மறைய நியாயமுண்டா?

காந்தி அடிகள் மறைந்த பின்பு இரண்டொரு ஆண்டுகளாக காந்தீய நெறியில் கலக்கம் ஏற்பட்டதும், இந்தியாவிலேயே காந்திய தத்துவத்தை இருள் கவ்விக் கொண்டதும் உண்மையே-

இந்த இருள் சூழ்ந்தநிலையில் காந்தீய ஒளிவிளக்கை உலகிடை ஏந்திச் சென்று ஒளி பரப்பவல்ல, தகுதிவாய்ந்த, உத்தமர் எவரேனும் உண்டா என்று தவித்தது காந்தி பரம்பரை

மனிதகுல உய்திக்கென உலகிடை உருவாகிய உத்தம ஒளித்தத்துவங்களுளெல்லாம், ஒப்பற்ற அற்புதப் புனிதத்தன்மைவாய்ந்த இந்தத் தனிப்பெரும் அருள்நெறி விளக்கை, அவியவிட உளம் கொள்ளாத திருவருள், ஆசாரிய விநோபா என்னும் அருட்தியாகியின் கையில் இப்பொறுப்பைச் சுமத்தியது.

காந்தியதத்துவத்தெவ்வாறு வளர்ப்பது, பிரகாசிக்கச் செய்வது, பரப்புவது, என்ற சிந்தையில் மூழ்கி மூன்றாண்டுகள் வரையில் பெருந்தவத்தில் ஆழ்ந்திருந்த விநோபா அவர்களுக்குத் தெலுங்கானா என்னும் ஊரில், ஆண்டவன் ஒரு அன்புவழியைக்காட்டி உதவினார்.

இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களுடைய வறுமைக்கும் தாழ்விற்கும் மூல காரணமாய் உள்ளது நிலப் பிரச்னை தான். இலட்சக்கணக்கான நிலங்கள் ஒரு சிலர் கையில் இருப்ப, கோடிக்கணக்கான மக்கள் ஒரு குழி நிலத்திற்கும் வழியற்றவர்களாக இருந்தனர். நிலமுடைமையில் - நிலப்பங்கீட்டில் -- ஏற்பட்டுள்ள இந்தக் கொடிய அநீதி ஒழிந்தாலொழியப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் அவற்றின் விளைவாகிய கொடிய வறுமையும் நீங்காவே என்ற சிந்தையில் ஈடுபட்டிருந்த விநோபா அவர்களுக்கு, இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் வழிதான் யாதோ என்பது பற்றித் தெளிவு உதயமாகாத நிலைமையில், பெருந் தவிப்பு ஏற்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் தான், சர்வோதயதத்துவம், ஒருவெறும் இலட்சியம் அன்று - வெறும் கனவும் அன்று - செயலில் வரவல்லதோர் விமோசன தத்துவம் என்னும் உண்மையைப் புலப்படுத்தும் நிகழ்ச்சியொன்று தெலுங்கானாவில் நிகழ்ந்தது.

அந்த ஊரில் நடந்த கூட்டமொன்றில வேலையில்லாது திண்டாடிய ஏழை விவசாயிகள் சிலர் விநோபாவிடம் சென்று தங்களுக்கு ஒரு 80 ஏக்கர் நிலம் தந்து உதவுமாறு கேட்டனர்.

இந்த உதவியை எவ்வாறு எய்வது என்று ஏங்கியிருந்த நிலையில் "நான் 100 ஏக்கர் நிலம் கொடுக்கிறேன்" என்று ஒரு குரல் கூட்டத்தின் மத்தியில் இருந்து எழுந்தது. என்ன ஆச்சரியம்! எண்பது ஏக்கர் கேட்டால், நூறு கொடுக்கிறேன் என்பதாம்! இது உண்மைதானா? நம்ப முடியவில்லை! ஆனால் நம்ப முடியாதது நடந்தது. இராமச்சந்திரம் செட்டியார் என்னும் புண்ணியவாளன் தான் அந்த அன்புக்கொடையை வழங்கினவர்.

கருத்தளவில் - கனவாய் - வித்தாய்க் கிடந்த சர்வோதய தத்துவம் அன்றுதான் ஒரு மாபெரும், நாடுலாவும்' சர்வோதய இயக்கமாக முளை கொண்டது.

தெலுங்கானாவில், அன்று திறந்த அன்பு ஊற்று இன்று இந்தியா முழுமையும் பெருக்கெடுத்தோடும் பூமிதான கங்கையாய்ப் பரந்து கிடக்கும் அற்புதக்காட்சி உலக மக்களுடைய கருத்தையெல்லாம் ஈர்த்து வியப்பில் ஆழ்ந்தி நிற்கின்றது.

இன்றுவரை ஏறக்குறைய 50 லட்சம் ஏக்கர் நிலத்தை 5 லட்சம் பேர்வரையில் ஏழைகளின் பொருட்டு மனமுவந்து பூமிதானமாக வழங்கியிருக்கிறார்கள் என்றால், இந்தச் சர்வோதயதத்துவத்தின் ஆற்றல் எத்தகையது என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

இந்த அற்புதத்தைப் பார்க்கவும், பார்த்தறிந்த முறைகளைத் தங்கள் நாடுகளில் செயல்படுத்தவும் எத்தனையோ அறிஞர்களும் சிந்தனையாளர்களும் விநோபாவின் இயக்கத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து இன்றுவரையும் சர்வோதய யாத்திரை செய்துகொண்டிருக்கிறார்கள். உலகப் புகழ் பெறும் அளவிற்கு இன்று சர்வோதய இயக்கம் விநோபா அவர்களால் வளர்க்கப்பட்டிருக்கிறது.

சர்வோதய இயக்கம், கடையனுக்கும் வாழ்வு- யாவர்க்கும் வாழ்வு என்ற அருளடிப்படையில் அமைந்துள்ளது.

சர்வோதய சமுதாயத்தில் சாதி, மத, பேதங்கள் யாவும் கிடையா; ஏழை, செல்வன், முதலாளி, தொழிலாளி என்ற வேற்றுமைகளுக்கும் இடம் இல்லை.

சிரமதானம். பூதானம், சம்பத்துத்தானம், வாக்குத் தானம், ஜீவதானம் போன்ற தானத் தொகுப்பாகிய தியாகச் சீர்மையில் சமுதாயத்தை உருவாக்குவதே சர்வோதய தத்துவம்.

இப்போது உலகம் போகிற போக்கில், உலகச் சமுதாய வளர்ச்சி வரலாற்றின் அடுத்தபடி நிலை சோஷலிஸம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆனால் மேற்கு நாடுகளில் உதயமாகி வளர்ந்து வரும் சோஷலிஸம் பலாத்காரம், உலோகாயதம் ஆகிய புன்மைகளில் உருவாகியுள்ளது.

சர்வோதயமும் சோஷலிஸமே. ஆனால் இது ஆத்மிகத்திலும் அகிம்சையிலும் உதிப்பது. இந்தக் காந்தீய சர்வோதய சோஷலிஸமே மனிதகுலத்திற்கு நிலையான விமோசனத்தையளிக்கவல்லது.

எனவே, சர்வோதய சோஷலிஸமா அல்லது மேற்கத்திய மார்க்ஸிஸ சோஷலிஸமா வேண்டும் என்பதை உலகம் தீர்மானிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உலக வாழ்வும் அழிவும் இத்தீர்மானத்தையே ஒட்டியது.

---

## சைவசித்தாந்த கோடை வகுப்புகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சைவப்புலவர் புகுமுகத் தேர்வினையும் தென்னிந்திய சைவ சித்தாந்த மகா சமாஜத்தார் 35 ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வரும் இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகளையும் வழக்கம்போல இவ்வாண்டிலும் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு திருக்கோணமலை என்னும் இடங்களிலும் போதிய பரீட்சார்த்திகள் தோற்றும் ஏனைய இடங்களிலும் அகில இலங்கை சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தார், சமாஜத்தினரின் அனுசரணை பெற்று விரிந்த முறையில் நடாத்துவா கவென தெரிவிக்கப்படுகிறது.

ஷ தேர்வுகளுக்குத் தோற்ற விருப்பவர்கள் மே மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சைவாபிமானிகளினதும் பரீட்சார்த்திகளினதும் வேண்டுகோள்களுக்கிணங்க இவ்வருடம் சிவஞான போதம் முதலிய 14 சைவசித்தாந்த நூல்களையும் விரித்து விளக்கும் கோடை வகுப்புக்களைத இந்தியப் பேறிஞர் இருவரது துணைகொண்டு நடத்தப்படும்

---

## கலைவிழா

தெல்லிப்பழை, வியாழன்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் கணைசயர் தமிழ்ச் சங்கம் அடுத்த மாதம் 22-ம் திகதி கலைவிழா ஒன்றினை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. இன்னிசை, நடனம், நாடக நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறுகின்றன

## சமயமும் யோகாசனமும்

### சுவாமி சச்சிதானந்தா விளக்கம்

வட்டுக்கோட்டை, வியா.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தில் யோகிராஜ் சச்சிதானந்தா சமீபத்தில நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:-

யோக வாழ்க்கை தனிப்பட்ட ஒரு பகுதி மக்களுக்கு என்று கருதப்படுவது அன்று. அது எல்லா மக்களுக்கும் பொது. யோகத்தில் எட்டுப் படிகள் உண்டு. மூன்றாவது படியாக வருவதே யோகாசனப் பயிற்சி. ஆசனப்பயிற்சியின் மூலம் நாம் உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருக்க முடியும். யோக ஆசனம் பழகுவதற்கு எவ்விதக் கோட்பாடும் இல்லை. இனமத பாகுபாடு யோக ஆசனத்தில் இல்லை. அதே நோக்கம் சிறிதேனும் இல்லாமலே இன்று உலகின் பல பாகங்களிலும் சிறந்த பணியாற்றி வருகிறது திவ்விய ஜீவன சங்கம். மதத்திற்கு மதம் வேறுபாடு இல்லை. எல்லோரும் ஆண்டவனின் குழந்தைகள்.

பிரிவினை இன்றி எல்லோரும் ஒரு குடும்பம் என்று வாழப்பழக வேண்டும். தனித்தன்மை எல்லோருக்கும் இருக்க வேண்டும். அதற்றவன் மனிதன் அல்ல. ஆனால் அந்தத் தனித்தன்மையில் பொதுத்தன்மையும் கலந்து இருக்க வேண்டும். அடிப்படை உண்மையை நாம் அறிந்து அதற்கு ஏற்ப நாம் வாழ்வோமானால் அங்கு வேற்றுமைக்கே இடமில்லை. தனித்தன்மை நம்மிடம் இருந்தாலும்நாம் எல்லோரும்ஒன்றுஎன்றுபெருந்தன்மை வேண்டும். பிரிவினை, வெறுப்பு என்பன வேண்டவே வேண்டாம். அதிலேதான் இன்று பலபாகங்களிலும் பல மக்கள் அல்லல் படுகிறனர். அபயம் என்பதன் அர்த்தம் பயம் இன்மை. அதைப் பயம் இல்லாத தன்மை நமக்குத்தேவை. ஒன்று. இருந்தால் சப்தம் இல்லை. இரண்டு சேர்ந்தாலே சப்தம். கையிரண்டும் சேர்ந்த உடனேயே சப்தம் கேட்கிறது. ஆகவே நாம் எல்லோரும் ஒற்றுமையாய் இருக்க வேண்டும். ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு. இன்றேல்அனைவர்க்கும் தாழ்வே. இப்படியான ஒரு சூழ்நிலையை யோக ஆசனத்தின் மூலம் ஆக்கிக் கொள்ளலாம். யோகப் பயிற்சியை இன்று பயன்படுத்தாத நாடே இல்லையெனலாம். யோகம் ஒரு தனிப்பகுதி. அதை மதத்துடன் சம்பந்தப்படுத்த முடியாது.

யோகப்பயிற்சிகளின் மூலம் உடம்பைக்கட்டுப்படுத்தப்பின் அது மனதைக் கட்டுப்படுத்துகிறது. இதுவே கடைசியில் ஆனந்தமய கோசமாகிறது. ஆகவே இதற்கு எல்லாம் யோகம் வழி வகுத்துக் கொடுக்கிறது. மனதைத் தூய்மைப்படுத்த வேண்டுமானால் முதலில் ஆசனப்பயிற்சி மூலம் உடம்பைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

---

## மிருதங்க அரங்கேற்றம்

நல்லூர், வெள்ளி

மயிலிட்டியைச் சேர்ந்த திரு ப. சிவராசாவின் மிருதங்க அரங்கேற்றம் ஞாயிற்றுக்கிழமை மாலை காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. சங்கீதவித்துவான் ஐயாக்கண்ணு தேசிகர் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் மிருதங்க வித்துவான் திரு. ஏ. எஸ். இராமநாதன், பல்கலைக்கழகங்களினால் பாராட்டப்படவிருக்கின்றார். அரங்கேற்ற விழாவிற்கான ஏற்பாடுகளை கம்பன் கலைக்கழகம் செய்து வருகிறது.

# யு. எஸ். விமானத்தை ரஷ்யர் சுட்டு வீழ்த்தினர்

பெர்லின், ஜன. 30

கிழக்கு ஜெர்மனியில் அமெரிக்க ஜெட்விமானம் ஒன்றை, ரஷ்யப் போர்விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தியது குறித்து அமெரிக்கா, ரஷ்யா இருநாடுகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொண்டன. விமானத்திலிருந்த மூன்றுபேர் மாண்டு விட்டனர்.

இந்த விமானம் ஆயுதமற்றிருந்ததென்றும் அதைச் சுட்டு வீழ்த்தியது நியாயமற்றதென்றும் அமெரிக்கா கூறியிருக்கிறது.

அமெரிக்க விமானம் கிழக்கு ஜெர்மனிக்குள் சட்டவிரோதமாகப் புகுந்தது ரடார் கருவி மூலம் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், கீழிறங்குமாறு விடுக்கப்பட்ட உத்தரவை அது லட்சியம் செய்யாததால் சுட்டுவீழ்த்தப்பட்டதென்றும் மாஸ்கோ அறிவித்தது.

# இவர்கள் பன்றிகளா?

பிரிஸ்டல், ஜன. 30

பிரிஸ்டல் சர்வகலாசாலை மாணவர்கள் பன்றிகளைப் போல் வாழ ஆரம்பித்திருப்பதாய் சர்வகலாசாலையின் செய்திப் பத்திரிகை குற்றஞ்சாட்டியிருக்கிறது. சில மாணவர்கள் தலைமயிரைச் சீவாமல் விரிச்சல் போட்டுக் கொண்டு பேய்போல் காட்சியளிப்பதாக அது எழுதியிருக்கிறது.

"காலி பியர் போத்தல்களும், சிகரெட் பாக்கெட்டுகளும் தரை முழுதும் சிதறிக் கிடக்கின்றன. சிலர் மட்டுமே ஒழுங்காய் இருக்கிறார்கள். பெரும்பாலோர் பன்றி வாழ்வு வாழ்கிறார்கள்" என்றும் அது குறை கூறியிருக்கிறது.

# சாஸ்திரி மீது பெரும் பாரம் சுமத்தப்படலாம்

## பார்வையாளர்கள் கருத்து

புதுடில்லி, ஜன. 30

உலகின் 2-வது பெரும் ஜனத்தொகையைக் கொண்ட ஒரு நாட்டை வழி நடத்தும் பெரும் பாரம் 59 வயதான திரு. லால்பகதூர் சாஸ்திரியின் மீது சுமத்தப்படலாம் எனத் தெரிகிறது.

திரு. நேருவின் சுகவீனத்தைத் தொடர்ந்து, அவரது பதவியை ஏற்கக்கூடிய, பிரச்சினை குறைந்த மனிதராக ஏற்கனவே அவர் வெளிவந்திருக்கிறார்.

திரு. நேருவின் உடல் நிலை தேறியபோதிலும் கூட, இந்திய அரசியலிலிருந்து நாளாவட்டத்தில் மறையக் கூடிய அவரது அதிகாரங்களில் பெரும்பாலானவை, வரும் சில மாதங்களில் லால்பகதூரிடம் ஒப்படைக்கப்படலாம்.

சுமார் 50 ஆண்டுகள் இந்திய அரசியலில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த நேருவின் அந்தஸ்தைப் பெறுவது திரு. லால்பகதூருக்கு முடியாத காரியம் எனப் பெரும்பாலான பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள நேரு, 16 வருடங்கள் பிரதமராகத் தொடர்ச்சியாக பதவி வகித்தும் கூட, எவ்வித முணுமுணுப்புமின்றி, இந்திய மக்கள் அவரது தலைமையை ஏற்றிருக்கிறார்கள்.

சமீபகால இந்திய சரித்திரத்தில் மகாத்மா காந்தியைத் தவிர, எந்த இந்தியரும் மக்களின் பேரன்பையும், பெருமதிப்பையும் நேருவைப் போன்று அவ்வளவு தூரம் கவர்ந்ததில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

திரு. நேருவின் நிலையும் அவரது கருத்துக்கும் உலகத்தின் எல்லாத் தலைநகர்களிலும், கிழக்கிலும், மேற்கிலும் உள்ள தலைவர்களினாலும் பெருமதிப்புடன் செவிமடுக்கப்பட்டது.

ஆனால் திரு. லால்பகதூர் சாஸ்திரிக்கு இவ்வளவு பெருமைகள் கிடையாது. எனினும் திரு சாஸ்திரியிடம் மனிதாபிமானமும், சூடான குழப்பநிலையைத் தணித்து சமரசம் உண்டாக்குவதில் அபார திறமையும் அடிப்படைச் சொத்துக்களாக அமைந்திருக்கின்றன. அவர் திறமையான அரசியல்வாதியும் கூட. இந்தக் குணங்கள்தான் தேசியத் தலைவர்களின் முன்வரிசையில் அவரை உயர்த்தின. காங்கிரஸ் கட்சியிலுள்ள தனது இதர சகாக்களைவிட திரு. சாஸ்திரிக்கு குறைவான எதிரிகளே உள்ளனர்.

நேருவைப் போலவே அவரும் குறை சொல்ல முடியாத நாணயஸ்தர்.

1904-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் திகதி ஹிந்து க்ஷத்திரமான காசியில் அவர் பிறந்தார். ஹரிச்சந்திரா பாடசாலையில் கல்வி கற்றார்.

1921-ம் ஆண்டு 17 வயது மாணவராய் இருந்தபோது படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு, மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். பின் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

# பிரெஞ்சு - சீன ராஜரீக உறவு பற்றி குழப்பம்

## போர்மோஸா முட்டுக்கட்டை

பீகிங், ஜன. 30

பிரான்சுக்கும் சீனவுக்குமிடையே ராஜதந்திர உறவு ஏற்படுத்திக் கொள்வதுபற்றியும் ஸ்தானிகர்களைப் பரிமாறிக் கொள்வதுபற்றியும் ஏற்பட்ட உடன்பாடு சம்பந்தமாக இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் குழப்பநிலை ஏற்பட்டிருக்கிறது.

ஏதாவது மறைமுகக் காரணம் இருந்தாலொழிய பாரிசில் போர்மோஸா தூதரகம் இருக்கும்வரை இரு நாடுகளுக்குமிடையே ராஜதந்திர உறவு சாத்தியமில்லை என சீன பிரான்சுக்கு தெரிவிக்குமெனக் கருதப்படுகிறது.

பிறநாடுகளுடன ராஜதந்திர உறவுகளை மேற்கொள்ளும்போது சீன மேற்கொள்ளும் வழக்கமான நிலை இதுதான்.

நிபந்தனையற்ற முறையிலேயே சீனவுடன் ராஜதந்திர உறவு மேற்கொள்வதென உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதாயும் மோர்மோஸாவுடன் உறவை முறித்துக் கொள்வதற்கான காரணம் எதுவும் தோன்றவில்லை என்றும் பிரெஞ்சு வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கை பற்றி பீகிங்கில் உடனடியான எதிரொலி ஏற்படவில்லை.

எனினும் சீன இதை ஏற்பது அசாத்தியம் என்றே ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

இதுவரை சீனப்பத்திரிகைகள் பாரிசில் ஏற்பட்டிருக்கும் எதிரொலிபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இரு சீனக் கொள்கையை பீகிங் ஏற்றிருப்பதாக வெளியான அமெரிக்கப் பத்திரிகைச் செய்தி உண்மைக்கு மாறானது என்று மட்டுமே சீனப்பத்திரிகைகள் கூறியுள்ளன.

# 38,000 ராத்தல் யு. எஸ். கிரகம்

கேப்கென்னடி, ஜன. 30

38,000 ராத்தல் நிறையுள்ள பெரும் செயற்கைக் கிரகம் ஒன்றை அமெரிக்கா வான வெளிக்கு அனுப்பியிருக்கிறது. இது 162 மைல் வரை வான வெளியில் 95 நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியைச் சுற்றி வரும். ஒருமாதம் முதல் ஒரு வருடம்வரை அது பூப்பிரதட்சணம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக்கிரகம் அனுப்பப்பட்டதை ஜனாதிபதி ஜோன்ஸன் கண்ணுற்றார்.

# தென்வியட்னமில் ராணுவப் புரட்சி

வாஷிங்டன், ஜன. 30

தென்வியட்னமில் இன்று அதிகாலை 4 மணிக்கு ராணுவப் புரட்சி ஏற்பட்டிருப்பதாக, வாஷிங்டன் செய்தி ஒன்று கூறுகிறது. டாங்கிகளும் கவச மோட்டார்களும், துருப்புக்களும் வீதிகளில் ரோந்து சுற்றி வருவதாயும் அறிவிக்கப்பட்டது.

# நாஸருக்கு நேரு கடிதம்

செய்ரோ, ஜன. 31

இந்திய உதவி வெளிநாட்டு மந்திரி திரு. தினேஷ்சிங், பிரதமர் நேரு ஜனாதிபதி நாஸருக்கெழுதியுள்ள கடிதம் ஒன்றை பிரதமர் அலிசாப்ரியிடம் சமர்ப்பித்தார். இக்கடிதத்தில் உத்தேச நடுநிலைமை மகாநாடுபற்றியும், அரபுத் தலைவர்கள் மகாநாடுபற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. திரு தினேஷ்சிங், வெளிநாட்டு மந்திரி திரு பௌஸியையும் சந்தித்தார். இன்று ஜனாதிபதி நாஸரை அவர் சந்திக்கிறார்.

# பனமாவில் தோல்வி

பனமா, ஜன 30

பனமா கால்வாய் விஷயமாக பனமாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

சீன

# மேலும் பல நாடுகள் அங்கீகரிக்கும்?

லண்டன், ஜன. 30

ஆபிரிக்காவிலுள்ள முன்னைய பிரெஞ்சு காங்கோ, கினி, மாலி ஆகிய நாடுகள் சீனவை அங்கீகரிக்குமென அறிவிக்கப்படுகிறது.

சீனவை அங்கீகரிக்கும் நோக்கம் ஜப்பானுக்குக் கிடையாது என பிரதமர் இக்கேடா அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு டீன்ரஸ்கும், தென் கொரியஜனாதிபதியும் பிரான்ஸ் சீனவை அங்கீகரித்ததன் மூலம் ஏற்படும் விளைவுகள் பற்றி ஆலோசனை நடத்தியிருக்கிறார்கள்.

# சூவின் கென்யா விஜயம் ரத்து

நைரோபி, ஜன 30

சீனப் பிரதமர் சூ-என்-லாய் கென்யா விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. சீனப்பிரதமரின் தன்ஸனீக்கா விஜயம் முன்பு ஒத்திவைக்கப்பட்டது.

# "பாக். பிரசாரம் பலிக்காது"

ஸ்ரீநகர், ஜன. 30

காஷ்மீர் விஷயமாக பாகிஸ்தான் புரிந்துவரும் பொய்ப் பிரசாரம் வெற்றி பெறாது என்றும். காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே என்றும் பிரதமர் ஷம்ஸுதீன் கூறினார்.

# நேரு உடல்நிலை வெகு திருப்தி

புதுடில்லி, ஜன. 30

பிரதமர் நேருவின் உடல் நிலை நன்கு தேறிவருகிறதென்று நேற்று வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கை கூறுகிறது. அகில பாரத வைத்திய சமூகம் நடத்திய பரிசோதனையில் அவரது உடல்நிலைபற்றி வெகுவாகத் திருப்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குடியரசு தின அணிவகுப்பில் டாக்டர்களின் அனுமதியின்மீதே அவர் கலந்துகொண்டார் என்றும், நிகழ்ச்சிகள் முழுவதையும் கவனித்த அவருக்கு எவ்வித சிரமமும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

பிரதமரின் உடல்நிலை நன்றாகத் தேறிவிட்டதால் இனி வைத்திய அறிக்கைகள் வெளியிடப்பட மாட்டாது என அதிகாரி ஒருவர் கூறினார்.

# தும்பாவிலிருந்து மற்றோர் ராக்கெட்

திருவனந்தபுரம், ஜன. 30

கேரளத்திலுள்ள தும்பா ராக்கெட் தளத்திலிருந்து நேற்று மற்றோர் ராக்கெட் அனுப்பப்பட்டது. புதிய வரிசையில் இது 3-வது ராக்கெட்டாகும். நூற்றிநாலரை மைல் சென்ற அதன் கருவிகள் நன்கு இயங்கின என்றும், முக்கிய தகவல்களை அது அனுப்பியிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

# காரைநகரில் அந்தர்யோகம்

சாவகச்சேரி, வியாழன்

"சம்பாத்தியத்தை நாம் பரபரப்போடு செய்கிறோம். அதுபோல ஓய்வையும் பரபரப்போடு செய்ய வேண்டும். உலக விவகாரங்களில் நான், எனது என்னும் ஆசை ஆணவப்பற்றோடு சதாகாலமும் கருமம் புரிந்து அல்லற்படும் மக்கள் இடையிடையே அவற்றினின்றும் இரண்டு மூன்று தினங்களாவது விலகி மனதை உள்முகப்படுத்தி இரவும் பகலும் தெய்வ சிந்தனையிலேயே லயிக்கப்பழகுதல் அவசியம். அதனால் அவர்கள் மனம் தூய்மையும் திடமும் பெற்று வாழ்வு வளம்பெறும். இத்தகைய வாய்ப்பை அன்பர்களுக்கு அளிக்கும் பொருட்டே அந்தர்யோக சாதனை நடைபெறுகிறது."

இவ்வாறு காரைநகர் வார்தாம்பள்ளி குருகுலத்தில் யோகிராஜ் சச்சிதானந்தஜீ அந்தர்யோக சாதனைபற்றி உரையாற்றும்போது கூறினார்.

அந்தர்யோகம் தொடர்ந்து மூன்று நாட்களாய் நடைபெற்றது.

மேற்படி நாட்களில் கூட்டுப் பிரார்த்தனை, உபந்நியாசம், சாந்திப்பாடல், ஆசனப் பயிற்சி, பிராணயாமம், ஜபம், தியானம், ஆராதனை, மௌனம், லிகிதஜெபம், பஜனை, வாசிட்பு. உட்கூழைப்பு. சத்சம்பாஷணை ஆகியன நடைபெற்றன.

# காலியில் சுதந்திரதின ஏற்பாடுகள்!

காலி, வியாழன்

இலங்கையின் 16-வது சுதந்திரதின விழா சரித்திரப் பிரசித்திபெற்ற காலிமாநகரில் கொண்டாடப் படவிருக்கின்றது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. காலி நகரத்தின் பிரபல வீதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இப்பொழுதிருந்தே நகரம் விழாக்கோலம் பூண்டு வருகின்றது.

சுதந்திரதினத்தை ஒட்டி காலியில் இரு பெரிய பொருட்காட்சிகள் நடைபெறவிருக்கின்றன. காலிமாவட்ட விஞ்ஞானப் பொருட்காட்சி சுதந்திரதினத்துக்கு முதல்நாள் பி. ப. 3 மணியளவில் சென். அலோசியஸ் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பிக்கப்படும். விஞ்ஞானப் பொருட்காட்சியை கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே திறந்துவைப்பார். சுதந்திர தினத்தன்று நகர மண்டபத்தில் பி. ப. 4 மணியளவில் மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா விவசாய கைத்தொழில் பொருட்காட்சியை திறந்து வைப்பார்.

பெப்ரவரி 3-ம் திகதி இரவு முழுவதும் காலிக் கோட்டையில் உள்ள ஸ்ரீ சுந்தரமலய ஆலயத்தில் 'பிரித்' ஓதப்படும். சுதந்திர தினத்தன்று நகரத்தின் பிரதான வழிகள் மூலம் பிரமாண்டமான சரித்திர வரலாற்று ஊர்வலம் ஒன்று செல்லும். இதில் 1000-க்கும் மேற்பட்ட காலி மாணவர்கள் கலந்து கொள்வார்கள். இந்த சரித்திர வரலாற்று நிகழ்ச்சியில் இலங்கையின் அரசியல் கலாச்சார மாறுதல்கள் பற்றி விபரிக்கும் நடனங்கள், ஆடை அலங்காரங்கள் ஆகியன இடம் பெறும்.

சுதந்திர தினத்தன்று கலாசார விழா ஒன்று புதிதாக நிறுவப்பட்டுள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெறும். இவ்விழாவில் 22 கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். யாழ்ப்பாணத்து கதகளி நடன நிகழ்ச்சியும், நாகஸ்வரமும் இவ்விழாவில் இடம் பெறும்.

சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கான செலவுகளுக்கென உள்நாட்டமைச்சு 40,000 ரூபா ஒதுக்கியுள்ளது. விற்பனவு இலாகா சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது சாப்பாட்டு வசதிகளைச் செய்து கொடுக்கும்.

# மக்காரியோஸ்

நிக்கோஸியா, ஜன. 30

சைப்ரஸ் அதிபர் மக்காரியோஸ், கீர்னியா பகுதியிலுள்ள கிரேக்கர்களின் கிராமங்களில் 6 மணி நேரம் சுற்றுப்பிரயாணம் செய்தார். எல்லாவிடங்களிலும் அவர் உற்சாகமாக வரவேற்கப்பட்டார்.

# வங்கிக்கொள்ளை!

லண்டன் ஜன 30

கொள்ளையடிக்க வந்த இருவரிடமிருந்து ஒரு லண்டன் வங்கிக்கு 15 பவுண் லாபம் கிடைத்தது.

இரு கொள்ளைக்காரர்கள், ஒவ்வொரு பவுண்கள் கொண்ட 50 பவுண் நோட்டுகளை வங்கி கவுண்டரில் சமர்ப்பித்து, 5 பவுண்களாக அதை மாற்றித்தருமபடி கேட்டனர்.

வங்கி உத்தியோகஸ்தர் 5 பவுண் நோட்டுகளை எண்ணிக்கொண்டிருக்கும்போது, அவற்றைப் பறித்துக்கொண்டு கொள்ளைக்காரர்கள் ஓடிவிட்டனர். ஆனால் அதில 7 நோட்டுகளே இருந்தன. அதாவது 35 பவுண்கள். அவர்கள் விட்டுச்சென்றதோ 50 பவுண்கள். வங்கிக்கு இதனால் 15 பவுண் லாபம் கிடைத்தது.

# அலுவல்களை தமிழில் நடத்த சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

சாவகச்சேரி, புதன் சாவகச்சேரி நகரசபையின் முதற்கூட்டமும் உபதலைவர் தெரிவும் இன்று அதன் தலைவர் திரு. ஆர். டி. சிவகுரு தலைமையில் நடைபெற்றது.

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடியின் அகால மரணத்தையிட்டும், காலஞ்சென்ற டாக்டர் எஸ். சுப்பிரமணியம் பி. எஸ். மரணத்தையிட்டும் மனைவிமக்களுக்கும் உறவினர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்புவதாக சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. பி அருளம்பலம் உபதலைவராகத் தெரிவு செய்யப் பெற்றார்.

### சபை அலுவல்கள் தமிழில் நடைபெறும்

உபதலைவர் தெரிவில் ஆறும் வட்டார அங்கத்தவர் திரு. கே. தர்மலிங்கமும் மூன்றும் வட்டார அங்கத்தவர் திரு எஸ். பாலசுப்பிரமணியமும், பத்தாம்வட்டார அங்கத்தவர் திரு. எஸ். கனகரத்தினமும் மறுப்புக் கூறித் தங்கள் பெயரைப் பதிவுசெய்து கொள்ளவும் வேண்டினர்.

சாவகச்சேரி நகரசபைக் காரியாலயத்தில் சகல அலுவல்களும் தமிழில் மாத்திரம் நடைபெற வேண்டுமென்றும் திரு. எஸ். ஆறுமுகம் பிரேரித்தார். திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அனுமதித்தார். ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி நகரசபைக்குரிய சந்தைகளை குத்தகைக்கு விடப்பட்டதையிட்டு விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி திரு. எஸ். கந்தையா சிவம், திரு. வி. இராசையா, திரு. எஸ். ஆறுமுகம், திரு.பி. அருளம்பலம் ஆகியோரை கொண்ட ஓர் உபகுழு நியமிக்கப்பட்டது.

## 'ஸ்ரீலங்கா' இன்று தினசரியாகிறது

கொழும்பு, வியாழன் நாளைய தினம் முதல் முதலாக அரசாங்கத்தின் பத்திரிகையான 'ஸ்ரீலங்கா' தினசரிப் பத்திரிகையாக வெளிவருகின்றது.

'ஸ்ரீலங்கா' தினசரியின் விநியோக சம்பந்தமாக ஒரு பிரச்னை எழுந்துள்ளது, ஸ்ரீலங்காவை விற்பனை செய்யும் ஏஜன்சிகளில் தபால் கந்தோர்களும் குறிப்பிட்டிருந்தன. ஆனால் தபாலதிபர்கள் எந்தப் பத்திரிகைக்கும் ஏஜன்சியாக இருந்து அவர்கள் எந்த பத்திரிகையையும் விற்பனைசெய்யக் கூடாது என்றும் அப்படி விற்பனை செய்தால் வேலை நீக்கம் செய்யப்படுவார் எனவும் தபாலதிபர்கள் சஞ்சிகையில் உள்ள சட்டத்தைக் காட்டி தாங்கள் 'ஸ்ரீலங்காவை' விற்பனை செய்ய முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்கள். தபால் சேவகனின் மனைவி கூட ஒரு பத்திரிகைக்கு ஏஜன்சியாக இருக்கக் கூடாது என அந்தச் சட்டத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

## ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

பருத்தித்துறை, வியாழன் புலோலி மெதடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பல ஆண்டுகாலம் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி தமது ஆசிரியசேவையினின்றும் இளைப்பாறும் ஆசிரியை திருமதி அ. அ ஆழ்வாப்பிள்ளைக்கு பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பிரிவுபசாரம் அளித்துக் கௌரவித்தனர்.

தலைமை ஆசிரியர் திரு. யோ. மு. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் ஆசிரியர்கள் ம. இராசலிங்கம், வி. வயிரமுத்து, யே. க. பொன்னுத்துரை, ஆசிரியை திருமதி செ. பொன்னுத்துரை ஆகியோர் சேவைநலம் பாராட்டிப் பேசினர்.

## கலைமணிவாசிகசாலை நிர்வாகிகள்

பருத்தித்துறை, வியாழன் வியாபாரிமூலை சனசமூக சேவா நிலைய, கலைமணி வாசிகசாலை ஆகியவற்றின் வருடாந்தக் கூட்டம் முதலியார் இ க வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இன்பருட்டி சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தை தொடர் எஸ சனகநாயகம் கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்பித்து வைத்து "கலை இன்பம்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றியதுடன் பாலர் கழக தேவார வகுப்புகட்கு தவறாது வரும் பிள்ளைகட்கு பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

கூட்ட முடிவில் நடைபெற்ற உத்தியோகத்தர்கள் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: முதலியார் இ. க. வைத்திலிங்கம், உபதலைவர், திரு. வெ. கிருஷ்ணதாஸ்.

## விசாரணைக் கமிஷன் தேவை

கொழும்பு, வியாழன் விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு பாடசாலை இன்ஸ்பெக்டர்கள் யூனியன் கல்வி மந்திரிக்கு எழுதியிருக்கிறது.

நியமனம், பதவி உயர்வு, உபகாரச்சம்பளம் ஆகியன பற்றி விசாரணை நடத்துமுகமாகவே கமிஷன் நியமிக்குமாறு அது கோரியிருக்கிறது.

இவ்விஷயங்களில் தற்போது காணப்படும் நிலைமை இன்ஸ்பெக்டர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி காணப்படுவதாக அது கூறியிருக்கிறது.

## சோவியத் பொருட்காட்சி

கௌஹாட்டி, ஜன. 30 கௌஹாட்டியில் ரஷ்யப் பொருட்காட்சி ஒன்றை அஸ்ஸாம் முதன்மந்திரி ஆரம்பித்து வைத்தார்.

காரியதரிசி: திரு. ஆ. முருகுப்பிள்ளை, தனாதிகாரி திரு. சி. கண்ணன்.

## கோரிக்கை நிறைவேறியது

கொழும்பு, வியாழன் மின்சார இலாகாவில், மின்சாரத்தை விநியோகிக்கும் ஊழியர்களுக்கு, அவர்களின் அடிப்படைச் சம்பளத்தின் 15 சத விகித அலவன்ஸ் கொடுப்பதற்கு மந்திரி சபை இணக்கம் தெரிவித்தது.

இதுவரையும் மின்சார விநியோக நிலையத்தில் வேலை செய்வோருக்கு மட்டுமே இவ்வித அலவன்ஸ் அவர்கள் செய்யும் ஆபத்தான வேலையைக் கருதிக் கொடுக்கப்பட்டது. மின்சார விநியோக நிலையத்தில்செய்யாவிடினும், மின்சார விநியோகத்தில் நேரடியாக ஈடுபடும் ஊழியர்கள் தாங்களும் அபாயமான வேலையையே செய்வதாகவும் தங்களுக்கும் அந்த அலவன்ஸ் வழங்க வேண்டுமெனக் கோரி வேலையில் ஈடுபடாமல் இருந்தனர். இதனால் பல இடங்கள் இருட்டில் மூழ்கியிருந்தன.

## கைதிகள் தப்பியோடினர்

அநுராதபுரம், வியா. சிறைக் கைதிகள் நால்வர் சிறைச்சாலையினின்றும் சுவரேறிக் குதித்துத் தப்பிச் சென்றுவிட்டனர். இச்சம்பவம் அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குமேல் நிகழ்ந்துள்ளதாகத் தெரிகிறது.

இக் கைதிகள் நால்வரும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட சிறைவாசத்தை அனுபவித்து வருபவர்களெனக் கூறப்படுகிறது. தப்பிச் சென்ற நால்வரையும் கண்டுபிடிக்கும் தீவிர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவாம்.


# ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

அதிசயப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் சுவை நிரம்பியிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ஏற்கனவே நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் (அநேகமாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபட்சத்தில், இன்றே இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்களே தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளிர்மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழச் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கட்டுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன் நல்லூர் சேவல தான காவலரின் ஆதரவில் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் அகில இலங்கைப் பொதுஜன சேவைசசங்க சமயப்பிரசாரசபையினரால் மாலை 6-45 மணிமுதல் இரவு 8 மணி வரையும் ஆசிரியர் திரு. க. சுப்பிரமணியம் 'முருகன் பெருமை' என்னும் பொருள் பற்றியும், மேற்படி சங்கச் சைவசமய அபிவிருத்திச் சங்க ஆதரவில் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகராலயத் திற் காலை 8-45 மணிமுதல் 9-45 மணிவரை ஆசிரியை ஸ்ரீமதி குணசுந்தரி துரைசிங்கம் 'செம்மனச்செல்வி' என்னும் பொருள்பற்றியும் மேற்படி சங்கத்தினரால வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தான காவலரின் ஆதரவில் அன்று மாலை 6 மணி முதல் 7 மணிவரை ஆசிரியர் திரு. ச. சதாசிவம் 'சமயத் தத்துவங்கள்' என்னும் பொருள் பற்றியும் மேற்படி சங்கச் சைவ இளைஞர்மன்ற ஆதரவில் அன்று மாலை 7 மணிமுதல் 8 மணிவரை நல்லூர் கிழக்கு மூத்த விநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் 'சிவராத்திரி' என்னும் பொருள்பற்றியும் பிரசங்கங்கள் செய்வார்களென அறிவிக்கப்படுகிறது.

## பஜனையும் மறை ஓதுதலும்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் பஜனைச் சபையினரால் தனசரியும், வாரந்தோறும் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளுடன் 31-1-64-ல் வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில் 7 மணி முதல் 8 மணி வரையும் சீரணி நாகம்மாள் தேவஸ்தானத்தில் 7-15 மணி முதல் 8-15 மணி வரையும் மறை ஓதுதலும் பஜனையும் பக்கவாத்தியங்களுடன் நடைபெறுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

## வானொலிநிகழ்ச்சிகள்

### வெள்ளி 31-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியசற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் —சரோஜினி தனபாலசிங்கம், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-30 சித்திரகானம், 1-00 கதம்ப இசை

மாலை 5-00பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்

இரவு 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை. 6-45 ஞானாஞ்சலி, 7-15 நாகஸ்வரம் — ஆர். சுந்தரமூர்த்தி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மதிப்புரை, 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 காந்தி அஞ்சலி, 7-30 சிந்தாமணி சகோதரர்கள் — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 5-15 சிந்தாமணி சகோதரர்கள்—நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கியெழும் பாரதம், 7-45 டி. என். கிருஷ்ணன்—வயலின், 9-15 இசைமாலை, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்பட இசை.



## புதிய புரக்டர்

திரு. சின்னத்துரை பாலேந்திரா சுப்றீம்கோர்ட் புரக்டராக, நீதியரசர்கள் அபேசுந்தர, ஜி. பி. ஏ. சில்வா ஆகியோர் முன்னிலையில் இம்மாதம் 29-ம் திகதி சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார் இவர், சட்டக்கல்லூரியில் தமிழ்ச்சங்கக் காரியக்குழு அங்கத்தவராகவும் தமிழ்ச்சங்க வெளியீடான 'நீதிமுரசு' இதழின் ஆசிரியராகவும் கடமை ஆற்றினர். சட்டக்கல்லூரியில் முதலாம் இரண்டாம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட தேர்வுகளில் விசேஷ சித்தி எய்தியதுடன் இரண்டாம் வருட உபகாரச் சம்பளமும் பெற்றார்.

கொழும்பு லீலாவதேரார்ஸ், நியூலீலா அச்சகம் ஆகியவற்றின் உரிமையாளரான திரு. ச. த. சின்னத்துரையின் இளைய புதல்வரான இவர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஆனந்தாக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவர். அச்சுக்கலையில் ஈடுபாடு உடைய இவர், டவெஸ்கோவினல் நடாத்தப்பட்ட வகுப்புக்களில் பயின்று அகில இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்துள்ளார்.

### கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

### என் 172 17-ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி வடபிரதேசம் (மேல்) யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி I இல் குறிக்கப்பட்டுள்ள கிராமச்சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி II இல் உள்ள ஏற்ற பதிவில் குறிககப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் பத்தி III இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், அந்த அட்டவணையின் பத்தி IV இல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வடபிரதேசம் (மேல்)

யாழ்ப்பாணம், 24, தை 1964.

| பத்தி I | பத்தி II | பத்தி III | பத்தி IV |
|---|---|---|---|
| உடுவில் | திகதி | நேரம் | உடுவில் |
| கிராமச்சபை | 8-2-64 | 10-00 மு. ப. | கிராமச்சபை அலுவலகம் |

### மிருதங்க அரங்கேற்றம்

சங்கீதபூஷணம் திரு A. S. இராமநாதன் அவர்களின் சிஷ்யன், மயிலிட்டி க. ப. சின்னராசா அவர்களின் மிருதங்க அரங்கேற்றம், எதிர்வரும் ஞாயிறன்று (2-2-64) பிற்பகல் 4 மணியளவில் காங்கேசன் துறை நடேஸ்வராக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. கம்பன் கலைக்கழக ஆதரவோடு, பல இசைச்சங்கங்களும், இசையாளர்களும் சேர்ந்து திரு. இராமநாதன் அவர்களுக்கு பாராட்டுவிழா நடத்துவர். திரு. சின்னராசா அவர்கள் ஷெ கல்லூரியின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தககது. கம்பன் கலைககழகம், வீமன்காமம், சங்கலத்தை மடம், மயிலிட்டி. 1921

### தேவை

அச்சக வேலைகளை மேற்பார்வை பார்க்கக்கூடிய திறமையும், பொறுப்பும் வாய்ந்த லிகிதர் (Clerk) தேவை. ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நாஷனல் அச்சகம், ராஜா பில்டிங், யாழ்ப்பாணம். 1918

### ஸ்ரீ சரவணபவான் கபே

### சுன்னாகம்

சுத்தமான - சுவையான -சத்துள்ள பலகாரம், சாப்பாடு, பானங்களை கிடைக்கும் 1909

## விளம்பரம்

### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 222-ம் இலக்கக் கடையில் கந்தையா பரமு அவர்களிடம் 1-4-60 தொடக்கம் 31-5-61 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாத வைகளை 14-2-64 வெள்ளிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி அடைவுக்கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வ. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
கோட் கொமிஷனரும் விலை மதிப்பாளரும்.

643, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1898

### கடைகள் வாடகைக்கு

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு முன்பாக பருத்தித்துறைவீதியில் இடவசதியுள்ள புதிய கடைகள் மூன்று வாடகைக்குக்கொடுக்கப்படும். விரும்புவோர் விபரங்களை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திரு. மு. கார்த்திகேசு B. A. அவர்களிடம் அறிந்துகொள்ளலாம். 1910

### அச்சக வேலைப் பயிற்சி

யாழ் நகரில்முதன் முதலாக எமது ஸ்தாபனம் வேலையற்றவர்களுக்கு அச்சக சம்பந்தப்பட்ட எல்லாவித வேலைகளுக்கும் பயிற்சி அளித்துவருகின்றது. அனுபவசாலியாகி நல்ல ஊதியத்தை அடைய அரிய சந்தர்ப்பம். சேர விரும்புவோர் உடனே விண்ணப்பிக்கவும்:- நாஷனல் அச்சகம், ராஜா பில்டிங், யாழ்ப்பாணம். 1917

### விற்பனைக்கு

மோரிஸ் மைனர் (Morris-Minor) டயர்கள் 500/14 குறிப்பிட்ட தொகை கையிருப்பில் இருக்கின்றன. விலைப் பட்டியலில் உள்ள விலைப்படி கொடுக்கப்படும். T. N. லிங்கம் & சன்ஸ், மோரிஸ் டீலர்ஸ், சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம். போன்: 408 1914

காங்கேசன்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில், உபயோகிக்கப்பட்ட ஓடுகள், மரங்கள், தீராந்திகள் விற்பனை செய்யப்படவிருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை விற்பனை நடைபெறும் பொருட்களைமுன்னரும் பார்வையிடலாம். தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், காங்கேசன் துறை. 1922

### கார் விற்பனை

EL போட் சபயர் விற்பனைக்கு உண்டு. விபரம்:- கந்தசாமி, 33, கொழும்புத் துறை ரோட், சுண்டுக்குளி. 1923

## பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன்

### மார்ச் 11-ந் திகதி அலுவல்களை ஆரம்பிக்கும்

கொழும்பு. வியாழன்

பண்டாரநாயகா கொலை சம்பந்தமான அரசியல் நோக்கம் பற்றி நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் மார்ச் 11-ந் திகதி தனது வேலைகளை ஆரம்பிக்கும்.

ஐக்கிய அராபியக் குடியரசைச் சேர்ந்த நீதிபதி திரு. அடெல்யூனிஸ், கானு சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. ஜி. ஸி. மில்ஸ்-ஒடாய் ஆகியோர் மார்ச் 10-ம் திகதி இலங்கை வந்து சேர்வார்கள். திரு. டி. எஸ். பெர்னாண்டோ தலைமையிலான இக்கமிஷனில் இவ்விரு வெளிநாட்டு நீதிபதிகளும் கடமையாற்றுகிறார்கள்.

மேற்கண்ட இருவெளிநாட்டு நீதிபதிகளும் கடந்த நவம்பர் 29-ம் திகதி இங்கு பூர்வாங்க விவாதம் நடத்திய பின் தாயகம் திரும்பினர். கடந்த ஜூன் 28-ம் திகதி இக்கமிஷன் நியமிக்கப்பட்டது.

கமிஷன், விசாரணையை ஆரம்பிக்கும்போது ஆஜராகியிருக்குமாறு ஐந்து பேருக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு மெக்கார்த்தி வீதியிலுள்ள 115-ம் இலக்கக் கட்டிடத்தில் விசாரணை நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

சொலிஸிட்டர் ஜெனரல் திரு. ஏ. ஸி. அலெஸ், முடிக்குரிய வழக்கறிஞர்களான திரு ஆர். எஸ். டபிள்யு. வனசுந்தர, திரு. ஆர் ஒபேசேகர ஆகியோர் கமிஷனுக்கு உதவியாளர்களாக இருப்பார்கள். திரு. ஜே. ஆர். எம். பெரேரா கமிஷனின் காரியதரிசியாய் இருப்பார்.

## சட்டவிரோத வெளியேற்றக்காரருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும்

### இந்தியாவின் புதிய சட்டம் பற்றி தூதராலயம் அறிவிப்பு

கொழும்பு, வியாழன்

சட்டவிரோதமாக நாட்டிலிருந்து வேறு நாட்டுக்கு குடியேறுபவர்களுக்கு கடும் தண்டனைகள் வழங்க அனுமதிக்கும சட்டம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இந்தியாவில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுளளதாக இலங்கையில் உள்ள இந்திய தூதராலயம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு சடடவிரோதமாக வெளியேறும் ஒருவருக்கு 3 மாதச் சிறையும், 50 ரூபா அபராதமும், அல்லது இரண்டில் ஒன்றையும் தண்டனையாக விதிக்க புதிய சட்டம் வழி செய்வதாக குறிப்பு தெரிவிக்கிறது.

வேறு நாட்டுக்கு இன்னொருவரை வெளியேற ஊக்கமளிக்கும் ஒருவருக்கு இரண்டு வருடம்வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்க புதிய சட்டம் வழிசெய்கிறதாம். இன்னொருவரை நாட்டிலிருந்து வெளியேறத் தூண்டும் ஒருவருக்கு மூன்றுவருட சிறைத் தண்டனையும், அபராதமும், ஒருதடவைக்குமேல் நாட்டிலிருந்து வெளியேற முயற்சிப்பவருக்கு நாலு வருடச் சிறைத்தண்டனையும, அபராதமும் அளிக்க புதிய சட்டம் வழிசெய்கிறது.

நாட்டிலிருந்து சட்டவிரோதமாக குடியேறுவதை இந்தியா எப்பொழுதும் எதிர்த்துவந்திருப்பதாகவும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக குடியேறுபவரைத் தடைசெய்ய இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் உதவி செய்துவருவதாகவும் தூதராலயக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 3 பொன் உருண்டைகள்



பல நூற்றாண்டுகளுக்கு முன் இத்தாலிய தங்க வியாபாரிகள் தங்க வியாபாரத்தின் ஒரு பகுதியாக ஈடுபிடிக்கும் தொழிலை ஆரம்பித்தனர். இது படிப்படியாக வளர்ந்து லாபகரமான ஒரு தொழிலாக நிலைபெற்றது. தங்கள் ஈடுபிடிக்கும் தொழிலின் அடையாளச் சின்னமாக அவர்கள் 3 பொன் உருண்டைகளை உபயோகித்தினர்.

ஆனல் மக்கள் வங்கி 3 பொன் உருண்டைகளை உபயோகிக்கவில்லை. அதற்கு மாருக தங்கள் ஈடுபிடிக்கும் சேவையை அளிப்பதில் 3 பொன் விதிகளைப் பின்பற்றுகிறது.

★ சுரண்டுதலிலிருந்து விடுதலை

★ நியாயமான வட்டி விகிதம்

★ உங்கள் பொருட்களை மீட்க சிறந்த சந்தர்ப்பம்

மக்கள் வங்கி

PEOPLES BANK

221. யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தீவெங்கிலும் 32 கிளைக் காரியாலயங்கள் உள்ளன.

# 'விரோத மனப்பான்மையுடன் பாகிஸ்தான் நடந்துகொள்கிறது'

## ஐ. நா. புறப்படு முன் சக்ளா குற்றச்சாட்டு

பாம்பாய், ஜன. 29

காஷ்மீர் விஷயம் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினையாக இப்போது இல்லை என்றும் இது பாரதத்தின் உள் விவகாரம் என்றும் இதில் வெளித்தலையீட்டை அனுமதிக்க முடியாது என்றும் காஷ்மீர் சம்பந்தமான விவகாரம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் விவாதிக்கப்படும் போது பாரதத்தின் நிலையை விளக்க பாரதப் பிரதிநிதியாகச் செல்லும் கல்வி மந்திரி திரு. சக்ளா இங்கு தெரிவித்தார்.

திரு. சக்ளா இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

பாகிஸ்தான் விரோத மனப்பான்மையுடனேயே இவ்விதப் பிரச்சினைகளைத் தூண்டிக் கொண்டிருக்கிறது. வகுப்பு ஒற்றுமைக்கு உழைக்காமல் கிளர்ச்சியைத் தூண்டிவிட அது முயற்சிக்கிறது. நமது கட்சி வலுவுடையது. ஒழிவு மறைவற்றது.

நாம் பாகிஸ்தானுடன் உறவு கொள்ள எடுத்த முயற்சிகளெல்லாவற்றையும் அது உதாசீனம் செய்துவிட்டு நம்மை எதிர்ப்பதில் கங்கணம் காட்டிக்கொண்டு நிற்கிறது.

இன்றிரவு நியுயோர்க் பயணமாகியுள்ள திரு. சக்ளா வழியில் ஒரு நாள் லண்டனிலும் தங்கிச் செல்வார். லண்டனில் அவர் பிரிட்டிஷ் பிரதமர் சேர் அலெக்ஸ்டக்ளஸ் ஹியூம், சாம்ராஜ்ய உணவு மந்திரி டங்கன்சான்ட்ஸ் ஆகியோருடன் பேசுவார்த்தை நடத்துவார்.

# வெளிநடப்பு செய்த சிங்கள குமாஸ்தாக்கள்

## கச்சேரியில் வேலை செய்ய அரசாங்க அதிபர் தற்காலிக உத்தரவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்யட்சகர் காரியாலயத்திலிருந்து வெளிநடப்புச் செய்த ஆறு சிங்கள குமாஸ்தாக்களும் இப்பொழுது யாழ்ப்பாணம் கச்சேரியில் வேலைபார்த்து வருகின்றனர்.

அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா கொழும்பிலிருந்து திரும்பியதும் ஆறு குமாஸ்தாக்களும் தாம் வெளிநடப்புச் செய்த காரணத்தைத் தெரிவித்தனர்

இவ்விஷயம் சம்பந்தமாகச் சுகாதார சேவை அத்யட்சகரை சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அழைத்துள்ளதால் இவ்விஷயத்தில் தாம் தலையிட விரும்பவில்லையென்றும் சுகாதார அமைச்சிலிருந்து உத்தரவு வரும்வரை கச்சேரியில் வேலைபார்க்கும்படி பிரஸ்தாப குமாஸ்தாக்களுக்கு அரசாங்க அதிபர் உத்தரவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது —

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, சி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்



மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

மதுரமான இசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள் அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.

கண்டுகளிக்கத் தவறாதீர்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### ரூ. 78 லட்சம் ஜவுளி வாங்கினர்

கொழும்பு, புதன்

திரு. ஆர். எஸ். பெரேரா தலைமையில் ஜவுளி வாங்குவதற்காக இந்தியா சென்றிருந்த இலங்கைத் தூதுகோஷ்டி கொழும்பு திரும்பியது.

பம்பாயிலும், டில்லியிலும் 65 லட்சம் ரூபாய் பெறுமதியான ஜவுளிகள் வாங்கியது தவிர, சென்னையில் பதின் மூன்றரை லட்ச ரூபாய் பெறுமதியான சேலைகள் வாங்கியதாயும் திரு. பெரேரா தெரிவித்தார்.

இவைகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படும்.

---

### குடியேறுவதற்கு சலுகை

புதுடில்லி, ஜன. 29

ஸ்ரீநகரிலிருந்து புனித சின்னம் களவாடப்பட்டதனால் கிழக்குப் பாகிஸ்தானில் சமீபத்தில் தோன்றிய இனக்கலவரத்தின் காரணமாக அங்கிருந்து இந்தியா வந்து வாழ விரும்பும் சிறுபான்மையினருக்கு குடியேற்ற அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் விதிகளைத் தளர்த்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

---

### தொல்புரத்தில் கலைவிழா

சுழிபுரம், புதன்

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய வாசிகசாலைக்கட்டட நிதிக்காக தொல்புரம் மானு முதலியார் மடத்திற்கு அருகாமையிலுள்ள திறந்த வெளியரங்கில் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. ஆ. கந்தசாமி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கிராமியக் கலை வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்கள் ஆற்றிவரும் சேவைகளைப்பாராட்டினர்.

---

### சமயப் பாடசாலை

கொழும்பு, புதன்

கொழும்பு இந்து வாலிபர் சங்கம் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி முதலிய இடங்களிலுள்ள சைவப் பிள்ளைகளுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் சமயக்கல்வி போதிப்பதற்காகப் பம்பலப்பிட்டியில் உள்ள கொழும்பு இந்துக்கல்லூரி நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டுள்ளது.

இந்தச் சமய வகுப்புகளுடன்- நடனம், சங்கீதம் போன்ற கலாச்சார வகுப்புகளும் நடாத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

---

### வேத பரீட்சை

சிலாபம், புதன்

முன்னேஸ்வரம் வேத சிவாகம விஸ்வவித்தியாபீடம் நடாத்தும் பிரவேச பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாலாம் திகதி நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் மார்ச்மாதம் நாலாந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

---

### தொழிலாளர் மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாணத்தைச் சேர்ந்த கிராமசபைகளிலும், பட்டின சபைகளிலும், நகரசபைகளிலும், மாநகரசபைகளிலும் கடமையாற்றும் நகரசுத்தித் தொழிலாளர்களின் மகாநாடு எதிர்வரும் சனிக்கிழமை திட்டியில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திரு அ. சூசை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல பிரமுகர்கள் பேசுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாமே எமது பணிகளை செய்யவேண்டும்

—எம். பி

சுழிபுரம், புதன்

வழுக்கம்பாரை அம்மன்கோவில் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட இலாப நிதிச் சங்கக் காரியாலயத்தை வட்டுக்கோட்டைத் தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் குத்துவிளக்கேற்றி திறந்துவைத்தார்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், அரசாங்கத்தினால் நடத்தப்படும் இன்ஸ்யூரன்ஸ் கூட்டுத்தாபனம், தமிழ் மக்களை ஏமாற்றக்கூடியவகையில் பற்றுச்சீட்டுகளை புரியாத பாஷையில் கொடுத்து திகைக்கவைக்கின்றதென்றும், அரசாங்கத்தின் ஓரபட்சமான நடவடிக்கைக்குத் தமிழ் பேசும் மக்கள் நல்ல பாடம் கற்பிக்கக் கூடியதாக தாமே தமக்கான பணிகளில் ஈடுபட்டு உழைக்க முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

---

### சிறு சேமிப்பில் அதிக தொகை

புதுடில்லி, ஜன. 29

சென்ற டிசம்பர் வரை இந்தியாவில் ரூ. 71 கோடி சிறு சேமிப்பு மூலம் சேமிப்புச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சேமிப்பில் மகாராஷ்டிரமே முதலிடம் வகுக்கிறது.

---

### டிட்டோ நாஸரை சந்திப்பார்

லண்டன், ஜன. 29

யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ அடுத்த சில வாரங்களில் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸரை கெய்ரோவில் சந்திக்கவிருக்கிறார்.

---

### சம்பளம் கொடுப்பதில்தாமதம்

கொழும்பு, புதன்

நில அளவைப் பகுதியில் உள்ள தமிழ் உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் பிந்திக் கொடுக்கப்பட்டது. இந்தத் தாமதத்திற்குக் காரணம் சிங்களத்தில் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்ததே.

சிங்கள உத்தியோகத்தவர்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்கப்பட்ட பின்னர் தமிழ்க் கணக்காளர் ஒருவர் தமிழ் உத்தியோகத்தர்களுக்கெல்லாம் சம்பளத்தைக் கொடுத்தார் என்று தெரியவருகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் இந்த இலாகாவில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றது நேயர்கள் அறிந்ததே.

---

### வட்டார இணைப்பு கோரிக்கை

கச்சாய், புதன்

சாவகச்சேரி கிராம சபையின் ஒரு வட்டாரமான மீசாலை வடக்கு வட்டாரத்தை கச்சாய் கிராமசபையுடன் இணைக்க வேண்டுமெனப் பொதுமக்களில் பலர் ஸ்தலஸ்தாபன மந்திரிக்குக் கடிதங்கள் அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

மீசாலை வடக்கு வட்டாரத்தின் சில பகுதிகளை மட்டும், கொடிகாமம் வட்டாரத்துடன் சேர்க்கும் யோசனை பயனளிக்காது என்றும், மீசாலை வடக்கு வட்டாரம் முழுவதையும், கச்சாய் கிராமசபையுடன் இணைக்கவேண்டுமென்றும், கச்சாய் கிராமசபை அங்கத்தவர் திரு கனகரத்தினம் தெரிவித்தார்.

### பாடசாலை அலுமாரிகள் சீல் வைக்கப்பட்டன

கஹவத்தை, புதன்

நுவரெலியாப் பகுதியின் உள்ள கீர்த்தி பண்டா மகா வித்தியாலயத்தின் அலுமாரிகள் யாவற்றுக்கும் இப்பகுதி கல்வி இலாகா உத்தியோகஸ்தர்கள் 'சீல்' வைத்துள்ளனர். முன்னர் இங்கு கடமையாற்றிய தலைமையாசிரியர் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்ட தலைமையாசிரியரிடம் வேண்டிய தஸ்தாவேஜுக்களை இதுவரை கொடுக்கவில்லை. இதுபற்றிய விசாரணை ஒன்று நடைபெற்று முடியும்வரை இப்பாடசாலையின் உதவி ஆசிரியர் ஒருவர் பதில் தலைமையாசிரியராக கடமையாற்றுவார்.

---

### அலங்கார உற்சவம்

தெல்லிப்பழை, வியாழன்

மாங்கொல்லை ஞான வைரவ சுவாமி கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் சனிக்கிழமை நடைபெறும் ஊஞ்சல் திருவிழாவுடன் பூர்த்தி அடைகிறது. இந்த இறுதிநாள் உற்சவத்தில் இயல் இசை நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

### மரண அறிவித்தல்

**சிவசுப்பிரமணியம்**

தனலக்ஷ்மியின் அன்புக் கணவரும் ரஞ்சிதகுமார், அமரநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும் யாழ்ப்பாணம் வார்ட் அண்ட் டேவிட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. சே. வைத்திலிங்கத்தின் இரண்டாவது மகனும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி காலஞ்சென்ற திரு. ஏ. வி. சோமசுந்தரத்தின் மருமகனும் முத்து குமாரசாமி (சென். [illegible] கல்லூரி கொழும்பு) சிவ[illegible] (லண்டன்) ஆனந்தராசா [illegible] மத்தியகல்லூரி), [illegible] வி. தங்கராஜசிங்கம் ([illegible] பாணம் அரசினர் [illegible] திரி) ஆகியோரின் சகோ[illegible]ரும், காலஞ்சென்ற ஏ. [illegible]னத்துரை, பரம் தில்லை[illegible] (அதிபர் கொழும்புத்[illegible] மகாவித்தியாலயம்), கே. [illegible] சிங்கம் (மருத்துவ ஆஸ்பத்[illegible] கொழும்பு), எஸ். என். தில்லை[illegible] சிங்கம் (கைத்தொழில் இலா[illegible] திருக்கோணமலை), ஜெயவீர[illegible] சிங்கம் (பொறியியல ள[illegible] மராமத்துப்பகுதி கொழும்பு), குலவீரசிங்கம் (நில அளவைப் பகுதி கொழும்பு), திருமதி சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமான யாழ்ப்பாண 440, கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த புறக்டரும் பிரசித்த நொத்தாரிசுமான வி சிவசுப்பிரமணியம் காலமாகிவிட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் நேற்று (30-1-64) பிற்பகல் 4 மணியளவில்கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றன.

●

**ஆர். என். சின்னையா சிவதாசன்**

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உப-அதிபரும், பவானியின் அருமைக் கணவரும், பிருந்தா, சித்திரா, தனுஜா ஆகியோரின் தந்தையும், இளைப்பாறிய மணியக்காரர் (ஆனைக்கோட்டை) ஆர். என். சின்னையாவின் புதல்வரும், பரமேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த ஆர். எஸ். குமாரசாமியின் சகோதரருமான சிவதாசன் காலஞ்சென்றுவிட்டார். நேற்று பி. பகல் 4-30 மணிக்கு வண்ணார்பண்ணை, அரசடிவீதி 96-ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காகக் கோம்பயன்மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது.